## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு
## சென்னை - திருமயிலை ஸ்தல புராணம்

---

சென்னை மாநகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள ஊர் திருமயிலை என்ற மயிலாப்பூர். மிகப் பழமை வாய்ந்த கடற்கரை ஊர். சாந்தோம் சர்ச், மாதவ பெருமாள், கபாலீஸ்வரர் , முண்டகக்கண்ணி அம்மன், கோலவிழி பத்ரகாளி அம்மன், தமிழ்நாடு சம்ஸ்க்ருத கல்லூரி, ம்யூஸிக் அகேடமி, பெரிய வற்றாத குளம் எனப் பல மெருமைகள் மயிலாப்பூருக்கு உண்டு.

**"கயிலையே மயிலை, மயிலையே கயிலை"** என்று மக்கள் புகழ்வது வழக்கம். இவ்வூர்க் கோயில் கபாலீச்சரம் எனப்படும். கபாலி என்றால் சிவனைக் குறிக்கும் ஒரு பெயர்.ஏன் அப்பெயர் அவருக்கு வந்தது?

**ப்ரஹ்மாவின் ஆணவம்:**

படைக்கும் திழிலைச் செய்யும் ப்ரஹ்மாவுக்கு ஐந்து தலைகள் இருந்தனவாம். தன்னால் தான் இந்த உலகில் அனைத்து செயல்களும் நடப்பதாக மிகவும் கர்வம் கொண்டு யாரையும் மதிக்காமல் ப்ரஹ்மா இருந்தார். ஒரு முறை இந்திரன் மிகப் பெரிய யாகம் செய்த போது அனைவரையும் அழைத்தான். அப்போது ப்ரஹ்மா தானே அனைவரைக் காட்டிலும் உயர்ந்தவர், எனவே தனக்கு சமமாக யாருக்கும் மரியாதை தரக் கூடாது எனக் கட்டளை இட்டார். இவரது இந்த ஆட்டத்துக்கு முடிவு கட்ட நினைத்த சிவன், தன்னுள் இருந்து பைரவமூர்த்தியை வெளி வர வைத்தார். பைரவரும் ப்ரஹ்மாவின் ஒரு தலையைக் கிள்ளி வீசினார். அத்தலையைக் கையில் ஏந்தி, "யாரும் "நான்" என்ற ஆணவம் கொண்டு திரிய வேண்டாம்!" என்று எச்சரிக்கை செய்து கபாலீஸ்வரர் ஆனார் சிவன். ப்ரஹ்மாவின் கபாலம் [மண்டை ஓடு] கிள்ளி வீசப்பட்டு ஆணவத்தை நீக்கியவர் இவர். நாம் தான் இந்த ப்ரஹ்மா. நம்மால் தான் இந்த வாழ்க்கையே நடப்பதாக சதா பிதற்றிக் கொள்கிறோம், தற்புகழ்ச்சி செய்து கொள்கிறோம். சரியான காலத்தில் நாம் மாறாவிட்டால் இறைவன் நமக்குப் பாடம் கற்பித்து உணர்த்துவான் என்று புரிந்து கொள்க.

**மானாட மயிலாட...**

கயிலை.,சிவன் பார்வதியை அழைத்தார். "உனக்கு ஏதாவது சந்தேஹம் இருந்தால் நான் சற்று ஓய்வாக இருக்கும் இவ்வேளையில் அதைத் தீர்த்துக் கொள்" என்று கூறினார்.

பார்வதிக்கும் பல சந்தேஹங்கள் இருந்தன. எனவே சிவன் முன் மரியாதையுடன் உட்கார்ந்து தன் சந்தேஹங்களைக் கேட்கத் தொடங்கினாள். அவரோ மிக ஆழமாகத் தெளிவாக விளக்கி பதில் கூறி வரும் போது; பார்வதிக்கு அலுப்புத் தட்டியது.எப்படிப் போதும் என்று சிவனிடம் சொல்வது? கேட்பது போல பாவனை செய்து கொண்டிருக்கிறாள் பார்வதி. மனம் எதை எதையோ எண்ணிக் கொண்டு அவர் தரும் விளக்கங்களைக் கேட்க மறந்து விடுகிறது.

அந்த வேளையில் முருகனின் மயில் அங்கு வந்து அழகியத் தோகையை விரித்து ஆடியதும் அதன் அழகில் தன்னை ஈடுபடுத்தி கவனம் சிதறினாள் பார்வதி. இதை உணர்ந்த சிவன், "ஆச்சார்ய அவமாரியாதை, கல்வி கற்க அவமரியாதை செய்த நீ மயிலாக உலகிற்குச் செல்" என்று சபித்து விடுகிறார். அதாவது உலக விஷயங்களில் மனதைக் கவனம் செய்ய ஆரம்பித்து விட்டால் ஆன்மீக விழிப்புணர்வு குறைந்து விடும் என்ற கருத்தை இங்கே உணர வேண்டும்.

மயில் தன் உடல் அழகில் உயர்ந்தது. ஆனால் அதனால் மிக உயரத்தில் மற்ற பறவைகள் போலப் பறக்க முடியாது. அப்படி என்றால் என்ன?
உலக வாழ்க்கையை வாழும் போது வெறும் உடலுக்கும் மனதுக்கும் தேவையான சுகபோகங்களையே சம்பாதித்து இன்பம் அனுபவித்தால் அவற்றைத் தாண்டி உயர்ந்த இறைத்தன்மை ஆகிய மெய்யுணர்வுக்குச் செல்ல முடியாது.

**மயில் போல பொண்ணு ஒன்னு...**
பார்வதி மயிலாக வந்து புன்னை மரங்கள் சூழ்ந்த கடற்கரைப் பகுதியில் பல காலம் சிவ பூஜை செய்து மெல்ல மெல்ல விழிப்புணர்வைப் பெற்று மீண்டும் தன்னை மெய்யுணர்வு நிலைக்கு உயர்த்திக் கொண்டு கயிலைக்குச் சென்றாள். கயிலை என்பது மிக உயர்ந்த மலைச்சிகரம். அது மிக உயர்ந்த மெய்யுணர்வின் அடையாளம் ஆகும்.

**கற்பகமே கருணைக் கண் பாராய்!**
மெய்யுணர்வில் வாழும் ஒருவர் சுயநலமே இல்லாமல் இருப்பர். அவர்கள் என்ன கேட்டாலும் வேண்டினாலும் நினைத்தாலும் உடனே இறை அருளால் கிடைக்கும். அதனால் தான் இக்கோயிலில் பார்வதி "ஸ்ரீகற்பக வல்லி" என்று போற்றப்படுகிறாள். கற்பக மரம் என்பது விரும்பியதை எல்லாம் தரும் மரம். அது மெய்யுணர்வை அடைந்த நம் மனமே ஆகும்.

தேவியின் சிலை மிகப் பெரியது. அழகியது. பாசாங்குசம், அபயவரதம் காட்டி கற்பகாம்பாள் அருள்கிறாள். வித விதமான ஆடைகள், பூப்பாவாடை, லலிதா

சகஸ்ரநாமத் தங்கக்காசு மாலை என அன்னைக்கு அழகே அழகாகப் பல இருக்கின்றன. இதை விட இந்த தேவியைப் போற்றிப் பல பக்தர்கள் பல பாடல்களைப் பாடியுள்ளனர். குறிப்பாக கர்நாடக சங்கீத மேதை ஸ்ரீபாபநாசம் சிவன் பாடிய கீர்த்தனைகள் மிகவும் புகழ் பெற்றவை.

சம்பந்தரும் அருணகிரிநாதரும் இக்கோயிலைப் போற்றிப் பாடினர்.

தமிழகத்தில் வேறு எங்கும் பார்க்க முடியாத அறுபத்தி மூன்று நாயன்மார் திருவிழா பங்குனி மாதம் இக்கோயிலில் நிகழ்வது மிகவும் சிறப்பாகும்.

சம்பந்தர் தேவாரம் பாடிய காலத்தில் இக்கோயில் கடலுக்கு அருகில் இருந்தது. மிகப்பெரிய சுனாமியால் சேதமானது. இன்று இருக்கும் கோயில் ஸ்ரீசிங்கார வேலவர் கோயிலாகத் தான் இருந்தது. அவருக்கு அருகில் கடலில் சேதமான கோயிலில் இருந்த லிங்கம் -தேவி விக்ரஹங்கள் ப்ரதிஷ்டை செய்யப்பட்டன. [பதிமூனாம் நூற்றாண்டில்]

சிங்கார வேல முருகன் மிக அழகியவர். வள்ளி தேவயானை இருவருமே யானை மீது அமர்ந்துள்ளது வித்யாசமான ஒன்று ஆகும்.
அறுபத்தி மூன்று நாயன்மார்களுள் வாயிலார் என்ற அடியார் இவ்வூரில் வாழ்ந்து சிவனுடன் கலந்தார். சம்பந்தர் பூம்பாவை என்ற பெண்ணை உயிருடன் மீட்டார்.[அவ்வரலாறு பின்னர் தனியே வரும்]

**விழிப்புணர்வு அதிகமாகும் பூமி...**

விஷ்ணு பக்தர்கள் ஆழ்வார்கள் ஆவர். அவர்கள் பன்னிரண்டு பேர். அவர்களுள் பேயாழ்வார் மயிலையில் பிறந்தவர். எனவே ஒரு நாயன்மாரும் ஆழ்வாரும் வாழ்ந்த புண்ணிய பூமி மயிலை. எனவே இங்குள்ள கோயில்களை முறையே வணங்கி வர விழிப்புணர்வு கூடும்.
கபாலீஸ்வரர் அருளால் ஆணவத்தை அழித்து, சதா மெய்யுணர்வில் சேவைகள் பல செய்பவர்கள் என்ன கேட்டாலும் கிடைக்கும் என்பதையே இக்கோயிலில் இறைவன் உணர்த்துகிறான்.

**சம்பந்தர் தேவாரம்:**

மட்டிட்ட புன்னை அம் கானல் மடமயிலைக்
கட்டிட்டம் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல் கணத்தார்க்கு
அட்டிட்டல் காணேதே போதியோ பூம்பாவாய்!

ஓம் நம சிவாய!